குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 112/2020

அ.சா. 1

2024–ம் ஆண்டு செப்டம்பர் 02–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவிந்தன் | ஜாதி | |
| தந்தை பெயர் | பெருமாள் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.18 மணி,

Accused Gnanasekaran present. Advocate Mr.Prakasam present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை.**

1. நான் பாரப்பட்டியில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த மாயக்கண்ணன் எனது மகன். சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் எனது உறவினர் எனக்கு போன் மூலம் எனது மகன் மாயக்கண்ணனுக்கு சௌந்தியன் பள்ளியின் அருகே விபத்து நடந்ததாக தகவல் கூறினார். விபத்து நடந்த போது எனது மகன் இருசக்கர வாகனத்தில் மேச்சேரி வழியாக வந்த போது பின்னால் வந்த வாகனம் அவர் மீது மோதி விட்டதாக தகவல் சொன்னார்.

2. தகவல் கேள்விபட்டவுடன் நான் சம்பவ இடத்திற்கு போன போது எனது மகனை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று விட்டனர். மருத்துவமனையில் செல்லும் வழியிலேயே எனது மகன் இறந்துவிட்டதாக சொன்னார்கள். இதுசம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையேகை என்னுடையது தான். **(அந்த புகார் அ.சா–ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** சம்பவத்தின் போது எனது மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் வகை மற்றும் பதிவெண் தெரியாது. எனது மகனின் மீது எந்த வாகனம் மோதியது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

3. மாலை 05.00 மணிக்கு எனது மகனுக்கு விபத்து ஏற்பட்ட தகவல் கிடைத்தது. எனக்கு தகவல் கொடுத்த நபரின் பெயர் விபரம் எனக்கு தெரியாது. விபத்து குறித்து எனக்கு தகவல் கிடைத்த உடன் நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு எனது மகன் இல்லை. அவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று இருந்தார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனை சென்று பார்த்த போது எனது மகனின் உடலை சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள் என்றால் சரி.

4. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. புகார் கொடுத்த தேதி தெரியாது. சம்பவம் நடந்து மறுநாள் காலை 10.00 நான் புகார் கொடுத்தேன். புகாரை நான் தொளசம்பட்டி காவல் நிலையத்தில் வைத்து எழுதி கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான் புகார் கொடுத்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றாலும் அதன் பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை என்றாலும் சரி.

5. எனது மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்று எனக்கு தெரியாது. எனது மகனின் கவனக்குறைவாலும், அஜாக்கரதையாலும் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும், எதிரியின் கவனக் குறைவாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எனது மகனின் இறப்பிற்கு நஷ்டஈடு பெறவேண்டும் என்பதற்கு இவ்வழக்கை எதிரி மீது பொய்யாக தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 03.34 மணி,

ஒம்/—ச.ஷர்மிளா.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.